# இந்திய மொழிச் சமூகத்திற்கான விக்கிமூலக் கையேடு

THE CENTRE FOR internet & society

# முன்னுரை

இணையத்தின் ஊடாக இந்திய மொழிகளில் அறிவு சார்ந்த செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல CIS நிறுவனம் உதவும். CIS-A2K என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, கன்னடம், கொங்கணி, மராட்டி, ஒடியா, தெலுங்கு ஆகிய ஐந்து மொழி விக்கிமீடிய சமூகங்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறோம். அத்துடன் பஞ்சாபி விக்கிமூலத் திட்டத்திலும் ஈடுபாடு காட்டி வருகிறோம். மேற்கூறிய சமூகங்களுடன் இணைந்து செயலாற்றிய போது, இச்சமூகங்கள் அனைத்தும் சந்தித்து வருகிற ஒத்த சிக்கல்களைக் கண்டறிந்தோம். எனவே, **"இந்திய மொழிச் சமூகத்தினருக்கான விக்கிமூலக் கையேட்டினை"** உருவாக்க முடிவு செய்தோம்.

முதற்கட்டமாக, இந்திய மொழிகளிலுள்ள விக்கிமூலத் திட்டங்களின் நிலவரத்தை குறித்துக் கொண்டோம். பின்னர், இந்திய மொழிகளில் பங்களிக்கின்ற விக்கிமீடியர்களை அணுகி, விக்கிமூலத் திட்டத்தில் அவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்கள் குறித்து பேசினோம். இக்கையேட்டின் வரைவைக் கொடுத்து கருத்துகளைக் கேட்டோம். இக்கையேட்டினை வெளியிட்ட பின்னரே, நம்முடைய பணி தொடங்கும். இச்சமூகங்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், அதன் மூலம் விக்கிமூலத் திட்டங்களை வளர்த்தெடுக்கவும் இச்சமூகங்களுடன் செயல்படுவோம்.

# அறிமுகம்

பழைய நூல்களை மின்மயமாக்கவும், இணையத்தில் இலவசமாக கொண்டு சேர்க்கவும் "'ப்ராஜெக்ட் குட்டென்பெர்கு'"[1] என்ற திட்டம் தன்னார்வலர்களால் 1971ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பொதுவெளியில் இருந்த பல்லாயிரக்கணக்கான நூல்கள் மின்னூல் வடிவம் பெற்றன. அதே நோக்குடன் செயல்படும் விக்கிமூலத் திட்டத்திற்கு 'ப்ராஜெக்ட் சோர்ஸ்பெர்க்' என்ற பெயரே முதலில் பரிந்துரைக்கப்பட்டதை நினைவு கூர்வோம். விக்கிப்பீடியாவிலுள்ள கட்டுரைகளுக்குச், சான்றாகக் காட்டப்பட்ட இத்தகைய மூல உரைகளின் எண்ணிக்கை காலம் செல்லச் செல்ல அதிகரிக்கத் தொடங்கியது. 2003ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்ட விக்கிமூலத்தில் 2005 மே 18ஆம் தேதியன்று 20,000 உரைத் தொகுப்புகள் சேர்க்கப்பட்டிருந்தன[2]. உலகமெங்கும் அணுகக் கூடிய இலவச இணைய நூலகமாக விக்கிமூலத் திட்டம் வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போதைய நிலவரத்தை அறிய, இவ்விணைப்பை[3] பார்க்க.

விக்கிமூலம் என்பது ஒரு பகிர்வுரிமையுள்ள, கட்டற்ற நூல்களைக் கொண்டுள்ள இணைய நூலகமாகும். பல மொழிகளில் இயங்கும் இந்த விக்கிமூலம் லாபநோக்கற்ற அமைப்பான விக்கிமீடியா அறக்கட்டளையால் கட்டமைக்கப்பட்டு, தன்னார்வலர்களால் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இங்கே ஒரு புத்தகத்தின் மின் வருடிய பதிப்பைப் பதிவேற்றி அதனை உரை வடிவில் கொண்டு வந்து, மெய்ப்புப் பார்த்து, அனைத்துக் கருவிகளுக்கும் உகந்த மின்னூலாக வெளியிடப்படுகிறது. மெய்நிகர் உலகில் ஒரு ஆவணக் காப்பகமாகவும் இருக்கிறது. இங்கே நூல்களைப் படிக்கலாம், நூல் உருவாக்கத்தில் பங்களிக்கலாம், நூல்களைக் கொடையளிக்கலாம்.

**காப்புரிமையைப் பற்றி அறிதல்**

**காப்புரிமை நிலையை கண்டறிதல்**

**பதிவேற்றல்**

**அட்டவணைப்படுத்தல்**

**எழுத்துணரி வழியாக உரையை எடுத்தல்**

**உரையை மெய்ப்புப்பார்த்தல்**

**மூல ஆக்கத்தைப் போல பக்க ஒருங்கமைவு செய்தல்**

**விக்கித்தரவுடன் இணைத்தல்**

விக்கிமூலத்திலுள்ள அனைத்து உள்ளடக்கங்களும் காப்புரிமையற்றவை. இதனால் எந்தவித காப்புரிமைச் சிக்கலும் இன்றி, இவற்றை நகலெடுக்கவும், மற்றவருக்கு வழங்கவும், உள்ளடக்கத்தைத் திருத்தவும் முடியும்[4]. பொதுவெளியில் கிடைக்கும் உள்ளடக்கத்துக்கும் விக்கிமூலம் போன்ற தளங்களிலுள்ள உள்ளடக்கத்துக்கும் வேறுபாடு உண்டு. பொதுவெளியில் ஒருவர் தன் ஆக்கத்தை வெளியிட்டுவிட்டால், அவர் அதற்கு காப்புரிமை கோர முடியாது. ஆனால், விக்கிமூலம் போன்ற திறந்த மூல தளங்களில் எவ்வகை உரிமத்துடன் ஆக்கம் பதிவேற்றப்படுகிறதோ, அதே உரிமத்துடன் தான் அதை பதிவிறக்குவோரும், நகலெடுப்போரும் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆசிரியர் ஒருவர் தன் ஆக்கத்தை இலவச உரிமத்துடன் விக்கிமூலத்துக்கு தருகிறார். ஆக்கத்தை பயன்படுத்தும் போது தன் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என உரிமத்தில் குறிப்பிடுகிறார் என்றால், அவ்வாக்கத்தை பயன்படுத்துவோர், அவரின் ஆக்கம் என்று குறிப்பிட்டே பயன்படுத்த வேண்டும். [5]

[1] https://www.gutenberg.org/

[2] See ‘Wikisource: What is Wikisource?’ https://en.wikisource.org/wiki/Wikisource:What_is_Wikisource%3F

[3] https://tools.wmflabs.org/phetools/statistics.php?diff=0

[4] https://en.wikipedia.org/wiki/Free_content

[5] https://en.wikipedia.org/wiki/Public_domain

# காப்புரிமை

## காப்புரிமை என்ற சொல்லின் பொருள் என்ன? ¨

## காப்புரிமை என்றால் என்ன?

ஒரு படைப்பை வெளியிடுபவருக்கு அந்த படைப்பின் மீதுள்ள சட்டப்படியான உரிமைகளை காப்புரிமை என்கிறோம். இலக்கியம், இசை, கலை போன்ற துறைகளில் வெளியிடப்படும் படைப்புகளுக்கும் காப்புரிமை உண்டு. படைப்பின் தன்மையை பொருத்து, அதன் மீதான காப்புரிமைகள் மாறுபடும்[6].

படைப்புக்குக் காப்புரிமை பெறப்பட்டால் படைப்பைத் மீதான வணிக உரிமையும், தார்மீக உரிமையும் ஆசிரியருக்கு உறுதிப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, ஆசிரியரின் அனுமதியின்றி அவரது படைப்பின் பகுதியை மற்றொரு தளத்தில் பயன்படுத்துவதை ஆசிரியர் தடுக்க காப்புரிமை உதவும்.[7] அந்த படைப்பை தன் புனைபெயரிலோ, பெயரின்றியோ வெளியிடும் உரிமையும் ஆசிரியருக்கு கிடைக்கும்.[8]

---

[6] Understanding Copyright and Related Rights, World Intellectual Property Organization, http://www.wipo.int/edocs/pubdocs/en/wipo_pub_909_2016.pdf

[7] Copyrights as an Economic Right, Japanese Society for Rights of Authors, Composers and Publishers, http://www.jasrac.or.jp/ejhp/copyright/property.html

[8] Understanding Copyright and Related Rights, World Intellectual Property Organization, http://www.wipo.int/edocs/pubdocs/en/wipo_pub_909_2016.pdf

# சுருக்கம்

| சொல்/சொற்கள் | விளக்கம் |
|---|---|
| **காப்புரிமை** | படைப்பாசிரியர் தன் விருப்பத்திற்கு ஏற்ப தன் படைப்பை மொழிபெயர்க்கவும், மறுபதிப்பு செய்யவும் வழங்கப்படும் உரிமைகளின் தொகுப்பே காப்புரிமை எனப்படுகிறது |
| **கூட்டாக்கப் படைப்பு** | இருவரோ, அவர்களுடன் பலரோ இணைந்து உருவாக்கும் படைப்பு. |
| **இந்திய காப்புரிமைச் சட்டத்திற்கு உட்பட்ட படைப்புகள்** | • இலக்கிய, நாடக, இசைத் தொகுப்புகள், கலைப் படைப்புகள் ஆகியவற்றின் மூலப்பிரதிகள்;<br>• திரைப்படங்கள் ;<br>• ஒலித் தொகுப்புகள் |
| **கலை வேலைப்பாடு** | • ஓவியம், சிற்பம், கோட்டோவியம், புடைப்புச் சிற்பம், எந்த வித கலை நுட்பமும் இல்லாத புகைப்படம்;<br>• கட்டமைப்புகளைக் கொண்ட எந்தவொரு படைப்பும்;<br>• மற்ற எல்லா வித கலைப்படைப்புகளும் |
| **இசைப் படைப்பு** | பேச்சு, செயல், சைகை போன்ற எதுவும் இன்றி, இசை மட்டுமே பதிவாகி இருந்தால் அது இசைப்படைப்பே. காப்புரிமையைப் பெற இசைப் படைப்பு எழுதப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. |

| சொல் | விளக்கம் |
|---|---|
| **ஒலிப்பதிவு** | பதிவு செய்யப்படும் ஒலி காப்புரிமைக்கு ஏற்புடையதே. அது எந்த கருவியிலும், எந்தவொரு முறைப்படியும் பதிவாகி இருக்கலாம். |
| **திரைப்படங்கள்** | ஒலியும், ஒளியும் இணைந்தவாறு தயாரிக்கப்படும் எந்தவொரு விழியமும் |
| **அரசுப் படைப்பு** | அரசு, அரசுத் துறை, நீதிமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றால் வெளியிடப்படும் அனைத்தும் |
| **இந்தியப் படைப்பு** | • இந்தியர் ஒருவரால் உருவாக்கப்படும் கலை, இலக்கிய, நாடகப் படைப்பு;<br>• முதன்முதலில் இந்தியாவில் வெளியாகும் படைப்பு;<br>• வெளியிடப்படாத படைப்பாக இருப்பின், அந்த படைப்பின் ஆசிரியர் இந்தியர் எனில் அந்த படைப்பு |

# காப்புரிமை நிலையை அறிதல்

இலக்கிய உரை, படம், காணொளி, ஒலி என எல்லா வகை படைப்புகளையும் விக்கிமீடிய பொதுவகத்தில் ஏற்றலாம். படைப்பை ஏற்றும் முன் படைப்பின் காப்புரிமை நிலையை அறிவது அவசியம்.
படைப்பு வெளியான நாட்டிலும், கோப்பாக ஏற்றப்படவுள்ள சர்வர் கணினியைக் கொண்ட நாட்டிலும் காப்புரிமைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, படைப்புக்கு பொது உரிமம் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

## இந்தியாவில் வெளியாகியுள்ள கோப்புகளும் படைப்புகளும்

ஏற்றப்படவுள்ள படைப்பு இந்திய சட்ட விதிகளின் படி பொது உரிமத்திற்கு உட்பட்டதா என அறிய, இந்திய காப்புரிமைச் சட்டம் (1957) படித்தறிய வேண்டும். அதன் சுருக்கம் கீழ் வருமாறு "படைப்பாசிரியர் பெயர் குறிப்பிடப்படாத படைப்புகள், நிழற்படங்கள், திரைப்படக் கோப்புகள், ஒலிப்பதிவுகள், அரசு ஆவணங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் ஆவணங்கள் உள்ளிட்டவை அவை வெளியான நாளில் (அல்லது பதிப்பிக்கப்பட்ட நாளில்) இருந்து சரியாக 60 ஆண்டுகளுக்குப் பிறகு பொது உரிமத்தைப் பெறுகின்றன. படைப்பாசிரியர் இறந்திருப்பின், அவர் இறந்து 60 ஆண்டுகளுக்குப் பிறகு படைப்பானது பொது உரிமத்தைப் பெறும். 1941ஆம் ஆண்டுக்கு முன்பு இறந்த படைப்பாசிரியரின் படைப்புகள், அவர் இறந்த 50 ஆண்டுகளிலேயே பொது உரிமத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அரசுப் பதிவேடு, சட்டதிட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்பு, அரசின் தீர்வறிக்கை உள்ளிட்ட அனைத்து அரசு ஆவணங்களும் பொது உரிமத்திற்கு ஏற்றவை. குறிப்பிட்ட அரசு ஆவணத்தை தொடர்புடைய அரசோ அரசு நிறுவனமோ பொது வெளியில் பயன்படுத்த தடை விதித்தால் மட்டுமே, அந்த ஆவணம் பொது வெளியில் வராது."

# அமெரிக்காவில் காப்புரிமை நிலை

இப்படைப்பு அமெரிக்காவில் பொது உரிமத்தைப் பெற்றதா என அறிய கீழ்க்கண்ட தகவல்களைப் பெற வேண்டும்.

* அமெரிக்க காப்புரிமை அலுவலகத்தில் 1923ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதிக்கு முன்பு பதிவு செய்யப்பட்டதா, அல்லது, அத்தேதிக்கு முன்பே வெளியானதா

* இந்தியாவில் முதலில் பதிப்பாகி, 30 நாட்களுக்குப் பின்னரே அமெரிக்காவில் பதிப்பானதா

* 1989ஆம் ஆண்டு மார்ச்சு ஒன்றாம் தேதிக்கு முன்பே காப்புரிமை பெறாமல் வெளியானதா அல்லது 1964 ஆண்டுக்கு முன்பு வரை காப்புரிமை புதுப்பிக்கப்படாமல் இருந்ததா, அல்லது, உருகுவே வட்டமேசை ஒப்பந்தச் சட்டம்[4] இயற்றப்பட்டு இந்தியாவும் அமெரிக்காவும் கையெழுத்திட்ட தேதிக்கு முந்தைய தேதியில் வெளியானதா. (ஒப்பந்தம் ஏற்கப்பட்ட தேதி : ஜனவரி 1 , 1996)

எடுத்துக்காட்டுகள்:

| ஆசிரியர் இறந்த வருடம் | படைப்பு பதிப்பான வருடம் | உரிமம் | பொதுவகத்திற்கு ஏற்றதா |
|---|---|---|---|
| <1918 | <1918 | <nowiki>{{PDold-100-1923}}</nowiki> | ஆம் |
| <1923 | <1923 | <nowiki>{{PDold-80-1923}}</nowiki> | ஆம் |
| <1923 | 1923-1940 | <nowiki>{{PD-IndiaURAA}}</nowiki> | ஆம் |
| <1923 | 1941-1958 | <nowiki>{{PD-India}}</nowiki> | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 1923 - 1940 | <1923 | <nowiki>{{PDold-70-1923}}</nowiki> | ஆம் |
| 1923 - 1940 | 1923 - 1940 | <nowiki>{{PD-IndiaURAA}}</nowiki> | ஆம் |
| 1923 - 1940 | 1941 - 1958 | <nowiki>{{PD-India}}</nowiki> | இல்லை |
| 1941 - 1958 | <1923 | <nowiki>{{PD-1923}}, {{PD-India}}</nowiki> | ஆம் |
| 1941 - 1958 | 1923 - 1940 | <nowiki>{{PD-India}}</nowiki> | இல்லை |
| 1941 - 1958 | 1941 - 1958 | <nowiki>{{PD-India}}</nowiki> | இல்லை |

[10] https://en.wikipedia.org/wiki/Uruguay_Round_Agreements_Act

**உரிமங்கள்:**

<nowiki>{{PD-old-100-1923}}[11]

, {{PD-old-80-1923}}[12]

, {{PD-IndiaURAA}}[13]

, {{PD-India}}[14]

, {{PD-old-70-1923}}[15]

, {{PD-1923}}[16]

,{{PD-US}}</nowiki>[17]

காப்புரிமையை பற்றி மேலும் அறிய, கீழுள்ள இணைப்பைக் காணக்.

**http://copyright.gov.in/documents/copyrightrules1957.pdf**

[11] https://commons.wikimedia.org/wiki/Template:PD-old-100-1923

[12] https://commons.wikimedia.org/wiki/Template:PD-old-80-1923

[13] https://commons.wikimedia.org/wiki/Template:PD-India-URAA

[14] https://en.wikipedia.org/wiki/Template:PD-India

[15] https://commons.wikimedia.org/wiki/Template:PD-old-70-1923

[16] https://commons.wikimedia.org/wiki/Template:PD-1923

[17] https://commons.wikimedia.org/wiki/Template:PD-US

# பதிவேற்றல் (பெயர்வெளி : கோப்பு/File)

கோப்பின் காப்புரிமை நிலையை அறிந்து உறுதி செய்த பின், கோப்பை விக்கிமீடிய பொதுவகத்தில் ஏற்றலாம்.[12] கோப்பை ஏற்றுவதற்கு பல வழிகள் உள்ளன.

## பதிவேற்றக் கருவிகள்

## அப்லோடு விசார்டு (Upload Wizard)

அப்லோடு விசார்டு[13] என்னும் கருவி விக்கிமீடிய பொதுவகத்தில் இயல்பிருப்பாக கிடைக்கும். இதைக் கொண்டு ஒரே நேரத்தில் 50 கோப்புகள் வரை பதிவேற்ற முடியும். கூடுதல் விவரங்களை அறிய, அப்லோடு விசார்டு உதவிப் பக்கத்தைப் பார்க்கவும்[14].

## ஐஏ-அப்லோடு கருவி (IA-upload tool)

ஐஏ-அப்லோடு கருவி[15] இன்டர்நெட் ஆர்க்கைவ் தளத்தில் இருந்து கோப்புகளை எடுத்து விக்கிமீடிய பொதுவகத்தில் ஏற்ற உதவியாக இருக்கும். DjVu வடிவக் கோப்புகளை மட்டுமே இக்கருவி ஏற்ற உதவும். இக்கருவியை பயன்படுத்துவதைப் பற்றி அறிய,




[18] https://commons.wikimedia.org/wiki/Main_Page

[19] https://commons.wikimedia.org/wiki/Special:UploadWizard

[20] https://commons.wikimedia.org/wiki/Commons:Upload_Wizard

[21] https://tools.wmflabs.org/ia-upload/

இக்கருவியினைக் கொண்டு தரவேற்ற விரும்பினால், கீழ்க்காணும்படி செய்யுங்கள்.

**1** ஐஏ அப்லோட் கருவிக்குச் சென்று, உள்நுழையுங்கள். உங்கள் விக்கிமீடிய கணக்கை பயன்படுத்தி பதிவேற்ற விரும்புகிறீர்கள் எனில், “OAuth” எனப்படும் அனுமதி கேட்கும்.

**2** archive.org தளத்தில் இருந்து எடுத்த அடையாள எண்ணை முதல் பெட்டியில் குறிப்பிடுக. (https://archive.org/details/<அடையாள_எண்> என்றவாறு முகவரி இருக்கும். அந்த அடையாள எண்ணையே இங்கு குறிப்பிட வேண்டும்)

**3** விக்கிமீடிய பொதுவகத்திற்கு ஏற்றப்பட இருக்கும் இக்கோப்பிற்கு நீங்கள் வழங்க விரும்பும் பெயரை இரண்டாவது பெட்டிக்குள் குறிப்பிடுங்கள். 'File:' என்ற முன்னொட்டோ, அந்த கோப்பின் வடிவமான .djvu/pdf போன்ற பின்னொட்டோ குறிப்பிடக் கூடாது. வெறும் பெயரை மட்டும் குறிப்பிடவும்

**4** ‘Get metadata’ என்ற பொத்தானை அழுத்துக. கோப்பைப் பற்றிய கூடுதல் விவரங்கள் எடுத்து வரும்.

**5** இது தரும் கூடுதல் விவரங்களை உறுதிப்படுத்துங்கள். தவறெனில் திருத்துங்கள். பொதுவகத்தில் <nowiki>{{book}}</nowiki> என்ற வார்ப்புரு உள்ளது. புத்தகத்தைப் பற்றிய அடிப்படை புலன்கள் இவ்வார்ப்புருவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**6** இன்டர்நெட் ஆர்கைவ் தளம் DjVu வகை கோப்புகளை உருவாக்குவதை மார்ச்சு 2016 உடன் நிறுத்திக் கொண்டது. சில கோப்புகள் இன்னும் இவ்வடிவத்தில் இருக்கக் கூடும். ஐஏ அப்லோடு கருவி DjVu வடிவக் கோப்புகளை உருவாக்க அனுமதிக்கும்.

a. JP2, PDF வகை கோப்புகளில் இருந்து DjVu வடிவத்திற்கு மாற்ற தேர்ந்தெடுத்தால், இச்செயல்பாடு முடிவடைய சில நிமிட நேரமெடுக்கும். இக்கருவி பெற்ற கோரிக்கைகளின் பட்டியலில் உங்கள் கோரிக்கையும் சேர்ந்து கொள்ளும்.

b. ஆர்கைவில் ஏற்கனவே DjVu கோப்பு இருக்குமெனில், அதையே தேர்ந்தெடுத்து தரவேற்றலாம்.

{{book}} வார்ப்புருக்களை காண்க[22]

URL2Commons[17] எனப்படும் கருவியின் மூலம் மற்ற தளங்களிலுள்ள கோப்புகளை விக்கிமீடிய பொதுவகத்தில் ஏற்ற முடியும். ஏற்கனவே உள்ள IA-upload என்ற கருவியின் மூலம் இன்டர்னெட் ஆர்கைவ் தளத்திலுள்ள DjVu வகை கோப்புகளை மட்டுமே பதிவேற்ற முடியும். URL2Commons கருவியின் துணை கொண்டு எவ்வகை கோப்பையும் எந்தவொரு தளத்தில் இருந்தும் எடுத்து பொதுவகத்துக்கு ஏற்றப்படும். உங்கள் பயனர் கணக்கில் இருந்து OAuth Uploader என்ற கருவிக்கு அனுமதி வழங்கினால் மட்டுமே இக்கருவியை பயன்படுத்த முடியும்.2 முதல் புலத்தில் கோப்புகளின் இணையத்தள முகவரியை இடவும். ஒன்றிற்கு மேற்பட்ட கோப்புகள் இருப்பின், ஒன்றின் கீழ் ஒன்றாக இடவும். ஒவ்வொரு இணைய முகவரிக்குப் பிறகும் இடைவெளி விட்டு அவற்றின் பின்னர் கோப்புகளுக்கு இட விரும்பும் பெயரை குறிப்பிடவும். 3 Description புலத்தில், கோப்பைப் பற்றிய விவரங்களை இட வேண்டும். இதற்கு {{book}} என்ற வார்ப்புருவை பயன்படுத்த வேண்டும்.




[22] https://commons.wikimedia.org/wiki/Template:Book

[23] https://tools.wmflabs.org/url2commons/index.html

1 இக்கருவியை பயன்படுத்துவதற்கு உங்கள் அனுமதி தேவைப்படும். எனவே OAuth Uploader என்ற கருவிக்கு உங்கள் கணக்கில் இருந்து அனுமதி கொடுக்க வேண்டியிருக்கும்.

2 முதல் பெட்டியில்

a. ஒவ்வொரு முகவரியையும் ஒவ்வொரு வரியிலும் இடுக.

b. ஒவ்வொரு முகவரிக்கு அருகிலும் இடைவெளி விட்டு, அக்கோப்பிற்கு நீங்கள் வழங்கவிருக்கும் பெயரைக் குறிப்பிடுக

3 Description பெட்டியில், இக்கோப்பினைப் பற்றிய விவரங்களை தருக. ஏற்கனவே உள்ள <nowiki>{{book}}</nowiki> என்ற வார்ப்புருவையும் பயன்படுத்தலாம். அதில் பல அடிப்படை தகவல்களுக்கான குறிப்பு இருக்கும்.

இந்த இணைப்பில்[24] சென்று அனுமதி வழங்கலாம்.

[குறிப்பு: பல புத்தகங்களை ஒரே நேரத்தில் தரவேற்றலாம். ஆனால், எல்லாவற்றுக்குமான காப்புரிமை நிலையை அறிந்தே தரவேற்ற வேண்டும். அப்படி இல்லை எனில், எல்லா கோப்புகளும் நீக்கப்பட்டு, பயனர் தடை செயப்படக்கூடும். எனவே, அனைத்து கோப்புகளின் காப்புரிமை நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்]

• கோப்பின் பெயரே, அட்டைப் பக்கத்தின் பெயராக இருக்கும். எனவே, கோப்பின் பெயரை சரியாக உள்ளிடுங்கள்.
• கோப்பைப் பற்றிய விவரங்களான ஆசிரியர் பெயர், பதிப்பாளர், பதிப்பித்த தேதி, உரிமம் போன்றவற்றை சரியாக குறிப்பிடுங்கள்.
• எந்த மொழி புத்தகமோ, அதே மொழியில் தலைப்பையும் விவரங்களையும் தரவும்.
• காப்புரிமை நிலையை சரியாக குறிப்பிடவும்.
• இவற்றுக்கு தனியான பகுப்புகளை பொதுவகத்தில் உருவாக்கவும். Category:Books in Tamil[25] என்று குறிப்பிடலாம்.

[24] https://tools.wmflabs.org/magnustools/oauth_uploader.php?action=authorize

[25] https://commons.wikimedia.org/wiki/Category:Books_in_Bengali

# காப்புரிமை பெற்ற புத்தகங்கள்

காப்புரிமை பெற்ற புத்தகங்களையும் பொதுவகத்தில் தரவேற்றலாம். ஆனால், அதற்கு முன், ஆசிரியரிடம் அனுமதி பெற்று, அவரே இதை பொது உரிமத்தில் வெளியிடுவதாக உறுதி பெற வேண்டும்.

**செய்முறை**

| | |
|---|---|
| **1** | கோப்பை பொதுவகத்தில் ஏற்றல் |
| **2** | பொது உரிமம் என்ற வார்ப்புருவை புத்தகத்தின் விவரப் பக்கத்தில் இடவும். |
| **3** | permissions-commons@wikimedia.org என்ற முகவரிக்கு உரிய சான்றுகளுடன் செய்தி அனுப்பவும். இதற்கு OTRS கருவியின் துணையை நாடலாம். |
| **4** | <nowiki>{{subst:OP}}</nowiki> வார்ப்புருவை பக்கத்தில் இடவும். அதுவே, பக்கத்தில் அந்த நாளைக் குறிப்பிட்டு வைக்கும். <nowiki>{{OTRS pending}}</nowiki> என்றவாறு அறிக்கை காட்டும். |

OTRS கருவி (Opensource Ticket Request System) [26]

<nowiki>{{subst:OP}}[27]</nowiki>

<nowiki>{{OTRS pending}}</nowiki>[28]

வைக்கப்படும் கோரிக்கையை OTRS குழுவினர் ஏற்று பரிசீலிப்பர்.

1. கோரிக்கைக்கான எண் உருவாக்கப்படும்.
2. அவர்கள் கோரிக்கையை பரிசீலித்து, தேவையெனில் கூடுதல் ஆவணங்களை கோருவர்.
3. {{OP}}[29] வார்ப்புருவை எடுத்துவிட்டு, <nowiki>{{PermissionOTRS}}</nowiki> வார்ப்புருவை இடுவர். கூடுதல் சான்று தேவை எனில், <nowiki>{{OTRS received}}</nowiki>[30] என்ற வார்ப்புரு சேர்க்கப்படும்.[31]

---

[26] https://tools.wmflabs.org/relgen/

[27] https://commons.wikimedia.org/wiki/Template:OP

[28] https://commons.wikimedia.org/wiki/Template:OTRS_pending

[29] https://commons.wikimedia.org/wiki/Template:OP

[30] https://commons.wikimedia.org/wiki/Template:OTRS_received

[31] https://commons.wikimedia.org/wiki/Template:PermissionOTRS

கூடுதல் விவரங்களுக்கு, விக்கிமீடிய பொதுவகத்தில் உள்ள கீழ்க்கண்ட இணைப்பில் காண்க.

**https://commons.wikimedia.org/wiki/Commons:OTRS Example:**



| **Permission** (**Reusing this file**) | This work is free and may be used by anyone for any purpose. If you wish to **use this content**, you do not need to request permission as long as you follow any licensing requirements mentioned on this page.<br>Wikimedia has received an e-mail confirming that the copyright holder has approved publication under the terms mentioned on this page. This correspondence has been **reviewed** by an OTRS member and stored in our permission archive. The correspondence is available to trusted volunteers as **ticket #2016051910023339**.<br>If you have questions about the archived correspondence, please use the OTRS noticeboard.<br>Ticket link: https://ticket.wikimedia.org/otrs/index.pl?Action=AgentTicketZoom&TicketNumber=2016051910023339 |
|---|---|

# அட்டவணைப்படுத்தல் (பெயர்வெளி:அட்டவணை)

1 விக்கிமூலத்தில் அட்டவணைப் பக்கத்தை உருவாக்கவும்.

2 {{book}} வார்ப்புருவை பயன்படுத்தி இருந்தால், வலது மேல் மூலையில் விக்கிமூலச் சின்னம் காட்டப்படும். அதை சொடுக்கினால், அந்த கோப்பின் மொழியில் அமைந்த விக்கிமூலத் தளத்திற்கு உங்களை இட்டுச் செல்லும்.

3 விவரத்தைச் சேர்த்து, பக்கத்தைச் சேமிக்கவும்.

மெய்ப்பு பார்ப்பவர்கள் கவனத்திற்கு: அட்டவணைப் பக்கத்தில் தான் புத்தகத்தின் மற்ற பக்கங்களுக்கான இணைப்பு இருக்கும். புத்தகத்தின் நிலை, மெய்ப்புப்பார்க்கப்பட்டதா போன்ற விவரங்களும் இதே பக்கத்தில் இடப்படும்.




ஒவ்வொரு விக்கிமூலத்திலும் கொடுக்கப்பட்டுள்ள புத்தக விவரங்கள் வேறுபடலாம். இருந்தபோதும், தலைப்பு, தொகுதி, ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பகத்தார், பதிப்பித்த ஆண்டு, அட்டைப்படம், புத்தகத்தின் தற்போதைய நிலை போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏதாவது விவரங்கள் விடுபட்டிருந்தால், அதைச் சேர்க்கச் சொல்லி, உங்கள் திட்ட நிர்வாகிகளை அணுகலாம்.
அடிப்படை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **தலைப்பு** | புத்தகத்தின் தலைப்பு |
| **தொகுதி** | புத்தகம் பல தொகுதிகளாக வெளிவந்திருப்பின், தொகுதியின் எண் |
| **ஆசிரியர்** | படைப்பின் ஆசிரியர், ஆசிரியர் பெயர்வெளிகளுடன் விக்கியிணைப்பு செய்யப்பட வேண்டும் |
| **மொழிபெயர்ப்பாளர்** | படைப்பின் மொழிபெயர்ப்பாளர், யாரேனும் இருந்தால், ஆசிரியர் பெயர்வெளிகளுடன் விக்கியிணைப்பு செய்யப்பட வேண்டும் |
| **தொகுப்பாளர்** | தொகுப்பின் ஆசிரியர், யாரேனும் இருந்தால் |
| **பதிப்பகத்தார்** | படைப்பின் வெளியீட்டாளர் |
| **வெளியீட்டு ஆண்டு** | கட்டாயம் குறிக்கப்பட வேண்டும் |
| **அட்டைப் படம்** | உள்ளடக்கப் பக்கத்தில் காண்பிக்கப்பட வேண்டிய அட்டைப் படம் (இயல்புநிலை முதல் பக்கத்துக்கு) |
| **முன்னேற்றம்** | இது மெய்ப்புப் பார்த்தலின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. (கீழே உள்ள முதல் பட்டியலைப் பார்க்கவும்) [1] |
| **பக்கங்கள்** | <Pagelist /> ஐ சேர்ப்பதன் மூலம் பக்கங்களின் பட்டியலைப் பெறுக. பின்னர் அவற்றை குறியிடவும். கீழே உள்ள இரண்டாம் எடுத்துக்காட்டைக் காண்க [2] |
| **உள்ளடக்க அட்டவணை** | முடிந்தால் உள்ளடக்க அட்டவணையைச் சேர்க்கவும் |

# 1. முன்னேற்றம்

| | |
|---|---|
| **முடிந்தது**<br><br>**ஒரு பக்கப் பட்டியலை உருவாக்கவும், கோப்பு சரிபார்க்கும் பணி முடிந்தது என்பதைக் குறிக்க, இரண்டாம் எடுத்துக்காட்டைக் காண்க** | ஒவ்வொரு பக்கத்திற்கும் சரிபார்ப்பு முடிந்தது. |
| **சரிபார்க்கப்பட வேண்டும்** | எல்லா பக்கங்களும் மெய்ப்புப் பார்க்கப்பட்டுள்ளது, சரிபார்க்கப்படவேண்டும். |
| **மெய்ப்புப் பார்க்கப்பட வேண்டும்** | எழுத்துணரி (OCR) மட்டும் செய்யப்பட்டுள்ளது, மெய்ப்புப் பார்க்கப்பட வேண்டும் |
| **மூல கோப்புக்கு OCR உரை தேவை** | மூலக்கோப்பு மட்டும் உள்ளது எழுத்துணரி (OCR) செய்யப்பட வேண்டும் |
| **மூலக் கோப்பு தவறு** | ஏதேனும் விடுபட்ட பக்கம் அல்லது வரிசைப்படுத்தப்படாத பக்கம் அல்லது நகல் பக்கம் போன்றவை இருந்தால். |
| **பக்கப்பட்டியல் தேவை** | ஒரு பக்க பட்டியலை உருவாக்கவும். கோப்பு முடிந்தது என்பதை சரிபார்க்க எடுத்துக்காட்டு 2 ஐக் காண்க |

# இரண்டாம் எடுத்துக்காட்டு:. பக்கப்பட்டியலை உருவாக்குவது எப்படி

```
<pagelist
1=நூலட்டை
2= உரிமம்


/>[[பகுப்பு:மேலடி சேர்க்கப்பட்டுள்ளது]]
```

உங்களிடம் ஒரு புத்தகம் உள்ளது, முதல் பக்கம் அட்டைப் பக்கமாகவும், இரண்டாவது பக்கம் ஒரு படத்தைக் கொண்டதாகவும், மூன்ராவது பக்கம் வெற்றுப் பக்கமாகவும், பக்கம் எண் ஒன்றானது, நான்காவது பக்கத்திலிருந்து தொடங்கி மேலும் பலவற்றைக் கொண்டிருந்தால், குறியீடு இப்படி இருக்கும்:

**<pagelist**

**1 = நூலட்டை**

**2 = படம்**

**3 = -**

**4 = 1**

**/>**

குறியீட்டு பக்கங்களில் உள்ள பக்கங்களின் பட்டியல் நான்காவது பக்கத்தில் ‘பக்கம் எண் 1’ எனவும், ஐந்தாவது பக்கத்தில் ‘பக்கம் எண் 2’ எனவும், இதுபோலவே மேலும் பலவற்றைக் காண்பிக்கும்.

பக்கப்பட்டியலில் ஏதேனும் விடுபட்ட பக்கமோ, வரிசைப்படுத்தப்படாத பக்கமோ, நகல் பக்கமோ இருக்கிறதா என்று சரிபார்க்கவும், நீங்கள் ஏதேனும் கண்டறிந்தால், முன்னேற்றம் என்பதில் (மேலே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்) ’மூலக் கோப்பு தவறு’ என்பதனைத் தேர்ந்தெடுக்கவும் .

# எழுத்துணரி (OCR) (பெயர்வெளியில்: பக்கம்)

எழுத்துணரி (Optical Character Recognition-OCR) என்பது ஒரு செயல்முறையாகும், இதன் மூலம் pdf / djvu / jpg போன்ற கோப்புகளிலிருந்து ஒளிவருடல் செய்யப்பட்ட படத்தில் உள்ள உரை எழுத்தை யூனிகோட் எழுத்துகளாக மாற்ற முடியும்.
இந்திய மொழிகளுக்கு, துல்லியமாக எழுத்துணரி செய்யப் பொருத்தமான மென்பொருள் 2015ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை இருக்கவில்லை. அதன் பிறகு கூகிள் இந்திய மொழிகளுக்கான OCR சேவையை வெளியிட்டது. இந்திய விக்கிமூலச் சமூகங்கள் அதுமுதல் OCR சேவையைப் பயன்படுத்துகின்றன.

## விக்கி மூலத்திற்கான எழுத்துணரி (OCR4Wikisource)

OCR4Wikisource என்பது டி. சீனிவாசன் என்பவர் உருவாக்கத்தில் **இலவசமாக** வெளிவந்துள்ள திறந்த மூல மென்பொருள் ஆகும். இது லினக்ஸ் இயங்குதள பயனர்கள் கூகிள் டிரைவ் ஏபிஐ பயன்படுத்தி மிக அதிகமான பக்கங்களை தானியக்கமாக எழுத்துணரி செய்ய உருவாக்கப்பட்டதாகும்.

இந்த மென்பொருளானது :

1 விக்கிமீடியா பொதுவகத்திலிருந்து புத்தகத்தை தரவிறக்கம் செய்யவும்

2 கோப்பை தனித்தனிப் பக்கங்களாக பிரிக்கவும்,

3 எழுத்துணரி (OCR) செய்வதற்காகப் பக்கங்களை ஒவ்வொன்றாக கூகுள் ட்ரைவில் பதிவேற்றவும்,

4 எழுத்துணரப்பட்ட (OCR) உரையைப் பதிவிறக்கம் செய்து அவற்றை அந்தந்த விக்கிமூலம் பக்கங்களில் பதிவேற்றவும்

( இதனை இயக்க தானியங்கிக் கணக்கு உருவாக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. ஸ்கிரிப்டை நிறுவ, முதலில் இந்த [32] இணைப்பிலிருந்து ஜிப் கோப்பை பதிவிறக்கவும்.)

1 மேலேயுள்ள இணைப்பிலிருந்து ஜிப் கோப்பை பதிவிறக்கவும்

2 ஜிப் கோப்பிலிருந்து OCR4wikisource-master என்ற கோப்புறையைப் பிரித்தெடுத்து அதை முகப்புக் கோப்பகத்தில் வைக்கவும்.

3 Ctrl + Alt + T. குறுக்குவழியைப் பயன்படுத்தி முனையத்தைத் திறக்கவும்.

4 பின்வரும் கட்டளைகளைத் தட்டச்சு செய்க:

```
cd OCR4wikisource-masterbash ./setup.sh
```

---

1 இந்த முகவரிக்குச் சென்று [33] புதிய திட்டத்தை உருவாக்கவும்.

2 கூகுள் இயக்கக API மற்றும் இணைவு அட்டவணைகள் API ஆகியவற்றைச் செயல்படுத்தவும்

3 சான்றிதழ் மெனுவுக்குச் சென்று, அதில் உறுதியேற்பு ஒப்புதல் திரைக்குச் சென்று, பயனர்களுக்குக் காட்டப்படவிருக்கும் பட்டியில் நீங்கள் ஏதாவது எழுத வேண்டும்

4 உறுதியேற்பாளர் அடையாளத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் சான்றுகளை உருவாக்கவும்

5 பிறருக்கான பயன்பாட்டு வகையைத் தேர்ந்தெடுத்து ஏதேனும் ஒரு பெயரையும் கொடுங்கள்

6 json கோப்பைப் பதிவிறக்கி OCR4wikisource-master க்கு நகலெடுக்கவும்.

7 json கோப்பை மறுபெயரிடுங்கள் (எடுத்துக்காட்டாக, client ID 845321670206-i9nfo44pma8 dmrbc0kqflv91dm3krlbl. apps.googleusercontent.com என்பதனை client_secret_845321670206-i9nfo44pma8dmrbc0kqflv91dm3krlbl.apps. googleusercontent.com.json எனப் புதிய பெயரிடவும்)

**8** முனையத்தைத் திறந்து பின்வரும் கட்டளைகளைத் தட்டச்சு செய்வதன் மூலம், இந்த [34] முகவரியிலிருந்து மற்றொரு கருவியைப் பதிவிறக்கவும் நிறுவவும்.

```
sudo apt-get install python-pip
sudo pip install google-api-python-client
sudo pip install gdcmdtools
```

**9** இந்த கட்டளையை இயக்கவும்

```
gdauth.py client_secret_file name.json
```

எடுத்துக்காட்டாக, json கோப்பின் பெயர் client_secret_845321670206-i9nfo44pma8dmrbc0kqflv91dm3krlbl.apps.googleusercontent.com.json எனில், பின்வரும் கட்டளையை கொடுங்கள் –

```
gdauth.py client_secret_845321670206-i9nfo44pma8dmrbc0kqflv91dm3krlbl.apps.
googleusercontent.com.json
```

**10** இந்த கட்டளையை இயக்கும் போது முனையத்தில் ஒரு இணைய இணைப்புக் கிடைக்கும், இணைப்பைச் சொடுக்கி, அனுமதி பொத்தானைச் சொடுக்கவும், இது நினைவுக்குறியுடன் புதிய பக்கத்தைத் திறக்கும்.

**11** நினைவுக்குறி எண்ணை நகலெடுத்து முனையத்தில் ஒட்டவும், அதன் பிறகு API கட்டமைக்கப்படும்.

**12** இப்போது, OCR4wikisource-master கோப்புறையில் சென்று config.ini கோப்பைத் திறந்து அதற்கேற்ப நிரப்பவும்.

```
file_url = <நீங்கள் எழுத்துணரி செய்ய விரும்பும் மூல முகவரி>
கலம் = 1
wiki_username = <உங்கள் தாணியங்கியின் பயனர் பெயர்>
wiki_password = <உங்கள் தானியங்கியின் கடவுச்சொல்>
wikisource_language_code = <2 எழுத்து மொழிக்குறியீடு>
keep_temp_folder_in_google_drive = ஆம்/ இல்லை
edit_summary = <தொகுப்புச் சுருக்கம்>
```

முனையத்தைத் திறந்து பின்வரும் கட்டளையை இயக்கவும்

```
python do_ocr.py
```

இந்த மென்பொருள் லினக்ஸ் ஒஎஸ்ஸில் மட்டுமே இயங்குகிறது என்பதை நினைவில் கொள்க. கூகுள் இயக்கக API உங்கள் மொழியை ஆதரிக்கிறதா என்பதையும் சரிபார்க்கவும்.

## கூகுள் எழுத்துணரிக் கருவி

கூகுள் எழுத்துணரிக் கருவியானது கூகிளின் கிளவுட் விஷன் ஏபிஐ [35] எழுத்துணரிச்சேவை வழியாக தற்போதைய பக்கத்தின் படத்திலிருந்து உரையைப் பெறும் பெயர்வெளி கருவிப்பட்டி பொத்தானை பக்கத்தில் சேர்க்கிறது. இந்தச் சேவைக்கான ஆதரவுமொழிகளைச் சரிபார்க்கவும் [36]. பின்னர் ஒவ்வொரு விக்கிமூலம் பக்கத்திலும் எழுத்துணரி செய்யப்பட்ட உரையைப் பெற அப்பொத்தானைச் சொடுக்கவும்.



# மெய்ப்புப் பார்த்தல் (பெயர்வெளி: பக்கம்)

விக்கிமூலமானது ஒரு நூலின் ஒவ்வொரு பக்கத்தையும் கைமுறையாக சரிபார்த்துக் கொள்ளும் ஒரு அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த செயல்முறையின் மூலம், எப்போதும் உரைகளை, அதே எழுத்தமைப்புடன் சேர்த்து, ஒளிவருடப்பட்ட பக்கங்களைப் போலவே, கூடுமானவரை வைத்திருக்க வேண்டும். இதற்காக, பல்வேறு வார்ப்புருக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில அடிப்படை வார்ப்புருக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| குறிச்சொல் | தமிழாக்கம் | விளக்கம் |
|---|---|---|
| {{Right}} | {{வலது}} | உரையை வலப்பக்கமாக வைத்திருக்க |
| {{Left}} | {{இடது}} | உரையை இடப்பக்கமாக வைத்திருக்க |
| {{Running Header\|left\|center\|right}} | {{இயங்கும் தலைப்பு \| இடது \| மையம் \| வலது}} | மூன்று தலைப்புகளை ஒரே வரிசையில் இடம், மையம், வலப்புறத்தில் வைக்க |
| {{Center}} | {{மையம்}} | உரையை மையத்தில் வைக்க |
| {{Block Center}} | {{ஒன்றியமையம்}} | உரையின் முழுத்தொகுதியையும் மையத்தில் வைக்க |

| | | |
|---|---|---|
| **{{Block Center/s}} &<br>{{Block Center/e}}** | {{ஒன்றிய மையம்/தொடக்கம்}}&<br>ஒன்றிய மையம்/முடிவு}} | உரை அடுத்த பக்கத்திற்கும் தொடருமாயின் உரையின் முழுத் தொகுதியையும் மையத்தில் வைக்க |
| **{{Gap}}** | {{இடைவெளி}} | ஒரு பத்தியின் தொடக்கத்தில் அல்லது இரண்டு சொற்களுக்கு இடையில் ஒரு இடைவெளியை வழங்க |
| **{{hyphenated word start}}**<br><br>**and**<br><br>**{{hyphenated word end}}** | {{ சொல்லிணைப்புக் குறியீடு முடிவு}}<br><br>{{சொல்லிணைப்புக் குறியீடு தொடக்கம்}} | {{சொல்லிணைப்பிற்கான தொடக்கச் சொல் \| சொல்லின் முதல் பாதி\|முழுச்சொல்}}<br><br>{{ சொல்லிணைப்பிற்கான முடிவுச் சொல் \| சொல்லின் கடைசி பாதி\|முழுச்சொல்}}<br><br>குறிப்பு: உரைமாற்றம் செய்யும்பொழுது இணைப்புக்குறியை நீக்கவும். பின்னர் இக்குறிச்சொல்லை இணைத்தால் பெயர்வெளி அல்லது பக்கத்தில் இணைப்புக்குறியீடு தானாகவே தோன்றும்.) |
| **{{smaller}}, {{x-smaller}}, {{xx-smaller}}**<br><br>**{{larger}}, {{x-larger}}, {{xx-larger}}** | {{சிறியது}},{{சற்று சிறியது}}, {{மிகச்சிறியது}}<br><br>{{பெரியது}},{{சற்று பெரியது}}, மிகப்பெரியது}} | சிறிய எழுத்துருவைப் பெற |

| | | |
|---|---|---|
| **{{nop}}** | | ஒளிவருடப்பட்ட ஒரு பக்கத்தின் முடிவில் ஒரு அத்தியாயத்தின் ஒரு பத்தி முடிவடைந்து ,அதே அத்தியாயத்தின் அடுத்த பத்தி அடுத்த பக்கத்தில் தொடங்குமாயின் கட்டாயமாக ஓர் இடைவெளியை ஏற்படுத்த |
| **{{DoubleHeightRow}}** | {{இரட்டைவரி இடைவெளி}} | இரண்டு வரிகளுக்கு இடையில் இடைவெளியை வழங்க. |
| **{{Rule}}** | {{வரி}} | கிடைமட்டமாக கருப்புக் கோடு செருக |

மிகவும் சிக்கலான வடிவமைப்பு பாணிக்கு ஏராளமான பிற வார்ப்புருக்கள் உள்ளன [36]. கவிதைக்கும் பாடலுக்கும் <poem> </ poem > என்ற html குறிச்சொல்லுக்கு இடையில் வைக்கப்பட வேண்டும். கவிதையோ பாடலையோ மையத்தில் வைக்க {{Block Center}} அல்லது {{Center}} வார்ப்புருக்களை பயன்படுத்தவும். பிரிவுகளுக்கு, நீங்கள் பிரிவைத் தொடங்க <section begin="label" /> என்பதனையும் பிரிவு முடிவில் <section end="label" /> என்பதனையும் உரையின் அந்தந்த இடங்களில் பயன்படுத்தலாம்.

மெய்ப்புப் பார்த்த பிறகு, மெய்ப்புப் பார்த்தல் பொத்தான் நிறத்தை இயல்புநிலை சிவப்பு நிறத்தில் இருந்து மஞ்சள் நிறமாக மாற்றவும். மெய்ப்புப் பார்ப்பதில் ஏதேனும் சிக்கல் இருந்தால், அதற்கு கூடுதல் கவனம் தேவை. அப்படி சிக்கலுள்ளதெனில் அதை நீல நிறமாக மாற்றவும். பக்கம் காலியாக இருந்தால், அதாவது எந்த உரையும் இல்லாமல் இருந்தால் அதை சாம்பல் நிறமாக மாற்றவும்.

மெய்ப்புப் பார்க்கப்பட்ட பக்கங்களை மட்டுமே சரிபார்க்க முடியும். மெய்ப்புப் பார்த்த பயனரே சரிபார்ப்புப் பணியையும் செய்ய முடியாது. இதற்குக் குறைந்தது இரண்டு பயனர்களின் ஈடுபாடு தேவைப்படுகிறது. சரிபார்ப்பு என்பது பக்கம் 100% பிழை இல்லாதது என்றும் அந்த பக்கத்திற்கு மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்பதாகும். சரிபார்த்த பிறகு, பயனர் வண்ணக் குறியீட்டை மஞ்சள் நிறத்தில் இருந்து பச்சை நிறமாக மாற்ற வேண்டும்.

# இடமாற்றம் (பெயர்வெளி : 0)

விக்கிமூலத் தொகுப்பாளர்கள் எழுத்துணரி கொண்டு பக்கப் பெயர்வெளிகளில் உரையை கொண்டு வந்து, மெய்ப்புப் பார்க்கிறார்கள். வாசகர்கள் தொகுப்பின் பின்னணிப் பணிகளைத் அறியவேண்டிய தேவையில்லை. ஆனால் வாசகர்களுக்காக, நூலின் உரை முதன்மைப் பெயர்வெளியில் வைக்கப்பட வேண்டும்.

இடமாற்றம் என்பது பக்கப் பெயர்வெளிகளில் உள்ள நூல்களின் உரைகளை முதன்மைப் பெயர்வெளிகளில் காண்பிக்கும் செயல்முறையாகும்.

எடுத்துக்காட்டாக,
பக்கவெளியில் abc.djvu என்ற நூலில் பக்க எண் x முதல் பக்கம் எண் Y வரை அத்தியாயம் I உள்ளது. முதன்மைப் பெயர்வெளிக்கு இதன் உரையை மாற்ற ( பக்கத்தின் தலைப்பு abc / அத்தியாயம் I ஆக இருக்க வேண்டும்) கீழ்க்காணும் தொடரை வழங்கவும்

**<pages index=”abc.djvu” from=x to=y/>**

மற்றொரு சான்றாக , அத்தியாயம் I பக்கம் x-இன் “p” பிரிவில் இருந்து தொடங்கி y பக்கத்தின் “q” பிரிவில் முடிகிறது. முதன்மைப் பெயர்வெளிக்கு இதன் உரையை மாற்ற ( பக்கத்தின் தலைப்பு abc / அத்தியாயம் I ஆக இருக்க வேண்டும்) கீழ்க்காணும் தொடரை வழங்கவும்.

**<pages index=”abc.djvu” from=x to=y fromsection=”p” tosection=”q” />**

# விக்கித் தரவு இணைப்பு

முதன்மைப் பெயர்வெளியில் உருவாக்கப்பட்ட படைப்புகள் எப்போதும் விக்கிதரவுடன் இணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு படைப்பும் ஓர் தனித்துவமான விக்கிதரவினைக் கொண்டுள்ளது, எனவே விக்கிமூலத்தில் உள்ள ஒவ்வொரு படைப்பும்  ஒரு சொந்த உருப்படியைப் பெறுகிறது.

விக்கிதரவில் சேர்க்கப்பட வேண்டிய பண்புகளின் பட்டியல் கீழே.

<Image of wikidata entry in tamil>

# Railroad Accident Report 92-01 (Q65953407)

1992 investigation report by National Transportation Safety Board

edit

In more languages

| Language | Label | Description | Also known as |
|---|---|---|---|
| English | Railroad Accident Report 92-01 | 1992 investigation report by National Transportation Safety Board | |
| Hindi | No label defined | No description defined | |
| Kannada | No label defined | No description defined | |
| Telugu | No label defined | No description defined | |

## Statements

instance of

work — edit

0 references

+ add reference

version, edition, or translation — edit

0 references

+ add reference

+ add value

title

Railroad Accident Report 92-01 (English) — edit

0 references

+ add reference

+ add value

subtitle

Derailment and Collision of Amtrak Passenger Train 66 with MBTA Commuter Train 906 at Back Bay Station, Boston, Massachusetts, December 12, 1990 (English) — edit

0 references

+ add reference

+ add value

genre

inquiry — edit

0 references

+ add reference

+ add value

author

National Transportation Safety Board — edit

0 references

+ add reference

+ add value

Authorship | Bodhisattwa  Mondal & Ananth Subray P V
Translation | Sibi Chakravathy & Parvathi Sri
Compilation | Ananth Subray P V
Design | Akash Sheshadri

(CC BY-SA 4.0)

This document is set in Hind Madurai
and IBM Plex Sans in varying styles and sizes.